**O**.**S**.362/2018

**நாள் :** 02-01-2020

**மகேஸ்வரன்** **PW**1

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி மேற்கொள்ளப்படுகிறார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி ..**

வா.சா.ஆ.9 ன் படி 09.11.2018 ம் தேதி நான் 3 பிரதிவாதிகளுக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அவர்களுக்கு சார்வாகி உள்ளது. அதற்குரிய அஞ்சல் ஒப்புகை அட்டை திரும்பப் பெறவில்லை. அதனால் அஞ்சல் அலுவலகத்தில் இருந்து 3 பிரதிவாதிகளுக்கும் நோட்டீஸ் சார்வானதற்கான Status report ஐ தாக்கல் செய்கிறேன். 1 ம் பிரதிவாதியின் Delivery report **வா.சா.ஆ.**10 ஆகும். 2 ம் பிரதிவாதியின் Delivery report **வா.சா.ஆ.**11 ஆகும். 3 ம் பிரதிவாதியின் 2 முகவரிகளுக்கு நோட்டீஸ் சர்வானதற்கான Delivery report **வா.சா.ஆ.**12 **மற்றும்** 13 ஆகும். அவர்கள் அனைவருக்கும் பதிவு அஞ்சல் அனுப்பியதற்கான இரசீதையும் தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வழக்கறிஞர் வேண்டுதலின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**O.S**.362/2018

**நாள்** : 11.02.2020

**மகேஸ்வரன் PW**1

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

நான் 9 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் 12 ஆண்டுகளாக செய்து வருகிறேன். எனக்கு 4 அல்லது 5 வங்கிகளில் சேமிப்பு கணக்கு உள்ளது. நான் வருமான வரி செலுத்துகிறேன். 2017-2018 மற்றும் 2018-2019 ஆண்டுகளுக்கு வருமான வரி செலுத்தியிருக்கிறேன். அதற்கான ரிடர்ன்ஸ்களை என்னால் தாக்கல் செய்ய முடியும். அந்த கணக்குகளில் தாவா கடன் பற்றிய குறிப்பு இருக்கிறதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி சுப்பிரமணியின் மனைவியின் பெயர் ஈஸ்வரி. ஈஸ்வரிக்கு எந்தத் தொழிலும் இல்லை என்றால் சரியல்ல. அவர் கணவருடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். ஈஸ்வரியின் பெயருக்கு வருமான வரி கணக்கு இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஈஸ்வரிக்கு 1 மகன், 1 மகள். அவர்கள் 2, 3 பிரதிவாதிகள். 2, 3 பிரதிவாதிகளுக்கு திருமணம் ஆன பின்னிட்டுதான் அவர்கள் எனக்கு பழக்கம். அதனால் அவர்களுக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்பது பற்றி எனக்குத் தெரியாது. 2, 3 பிரதிவாதிகளை அவர்கள் வீட்டில் பார்த்திருக்கிறேன். பழக்கம் உண்டு. ஜானகி சித்தோட்டில் அம்மன் கல்லூரி பின்புறம் குடியிருக்கிறார். தன் அப்பாவுடன்தான் ஜானகி இருந்து வந்தார். 3ம் பிரதிவாதி பழையபாளையத்தில் இருந்தார். தற்போது எங்கு குடியிருக்கிறார் என்று தெரியாது. ஈஸ்வரி 2017-2018 சமயங்களில் என்ன குடும்பத் தேவைக்காக கடன் வாங்கினார் என்றால் நிலம் வாங்குவதற்காக என்னிடம் பணம் கடன் கேட்டார். அதிகபட்சம் 10 நாட்கள் முதல் 1 மாதத்திற்குள் பணத்தை திருப்பித் தந்து விடுவதாகச் சொன்னார். அதற்காக ஈஸ்வரி எனக்கு காசோலை கொடுத்தார். 09.03.2018 ம் தேதி கடன் வாங்கிக் கொண்டு அதே தேதியில் ஈஸ்வரி எனக்கு ஒரு காசோலை கொடுத்தார். மறுநாளே பணம் வந்தால்கூட தொகையை திருப்பிக் கொடுத்துவிடுவதாக ஈஸ்வரி சொன்னார். அதனால் வட்டி விகிதம் பேசிக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 1 ½ வட்டி சேர்த்து கொடுக்க வேண்டும் என்று பேசிக் கொண்டோம். பேசியபடி ஈஸ்வரி எனக்கு 10 நாட்களுக்குள் பணத்தை திருப்பித் தரவில்லை. எனவே 10 நாட்கள் கழித்து நான் காசோலையை பணமாக்க செலுத்தினேனா என்றால் இல்லை. ஈஸ்வரியிடம் வாய்மொழியாக பணத்தைக் கேட்டுக் கொண்டே இருந்தேன். ஈஸ்வரி உயிருடன் இருந்தவரை அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதையும் நான் அனுப்பவில்லை. பணத்தை வாங்கிக் கொண்டு திருப்பித் தராமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் என்று

ஈஸ்வரியின் மீது நான் காவல்துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஈஸ்வரி பணம் வாங்கிக் உள்ளார் என்றும், அதை திருப்பித் தரக் கோரியும் கேட்டேனா என்றால் ஈஸ்வரி உயிருடன் இருந்தவரை அவரது கணவரிடமும் பின்னர் அவரது தகப்பனாரிடமும் கேட்டுக் கொண்டே இருந்தேன். 1ம் பிரதிவாதி பணத்தை திரும்பத் தருவதாகச் சொன்னார். ஆனால் அவர்மீது நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஈஸ்வரி 30.05.2018 ம் தேதி இறந்துவிட்டார். ஈஸ்வரிக்கு சொத்துக்கள் அம்மன் நகரில் இருந்தது என்றால் ஆமாம். ஈஸ்வரியின் கணவர்தான் அம்மன் நகரில் இருந்த பெரிய இடத்தை வாங்கி மனை இடங்களாக பிரித்து கிரையம் செய்தார் என்றால் ஆமாம். ஈஸ்வரியின் கணவர்தான் பல நபர்களுக்கு மனை இடங்களை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த வகையில் ஈஸ்வரியின் பெயருக்கும் 2 மனையிடங்களை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ஆமாம். ஈஸ்வரி பெயரில் உள்ள கிரையப் பத்திரத்திற்கு உண்டான தொகையை ஈஸ்வரி அவரது கணவருக்கு கொடுத்தாரா என்றால் கணவன் மனைவிக்குள் பணம் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஈஸ்வரி பெயரில் உள்ள சொத்தில் 1 அயிட்ட சொத்தைப் பொறுத்து 09.01.2013 தேதியில் என் பெயரில் பொது அதிகாரப் பத்திரம் எழுதி அதன் அடிப்படையில் அந்த சொத்தை என் மனைவிக்கு நான் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்றும் அதற்காக ஏற்பட்டவைதான் வா.சா.ஆ.5 மற்றும் 6 என்று சொன்னால் சரிதான். அதற்கு முன் ஈஸ்வரி என்னிடம் பணம் வாங்கியதற்காக என் பெயருக்கு பொது அதிகாரப் பத்திரமும் என் மனைவிக்கு கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்தி பின்னர் அதற்குரிய பணத்தை ஈஸ்வரி எனக்கு கொடுத்துவிட்டதால் வா.சா.ஆ.7 மூலம் என் பெயருக்கு இருந்த பொது அதிகாரப் பத்திரத்தை இரத்து செய்து கொண்டோம். சொத்தை வாங்கும் எண்ணத்துடன் வா.சா.அ.6 ஏற்படவில்லை. நான் வழக்கிற்காக இதுபோல் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை வாங்கும் எண்ணத்துடன்தான் பொது அதிகாரப் பத்திரமும், கிரைய ஒப்பந்தமும் ஏற்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து என்னால் கிரையம் பெற முடியாததால் ஈஸ்வரி வா.சா.ஆ.7 மூலம் எனது பொது அதிகாரப் பத்திரத்தை இரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. ஏற்கனவே ஈஸ்வரி என்னிடம் வாங்கியிருந்த கடனிற்காகத்தான் வா.சா.ஆ.7 மற்றும் 8 ஏற்பட்டதாக நான் கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனக்கும் ஈஸ்வரி குடும்பத்திற்கும் சொத்துக்கள் வாங்குவது, விற்பது சம்மந்தமாக ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாகவும், அதன் காரணமாகத்தான் வா.சா.ஆ.7, 8 ஏற்பட்டது என்றும் சொன்னால் தவறு. எனக்கும் ஈஸ்வரியின் குடும்பத்தாருக்கும் 2013 ஆண்டு முதலே எந்தவிதமான போக்குவரத்தும் பேச்சுவார்த்தையும் இல்லை என்று சொன்னால் தவறு. பேச்சு வார்த்தையே இல்லாததால் நான் ஈஸ்வரிக்கு கடன் கொடுத்ததாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் நான் கடன் தொகையை

ரொக்கமாகத்தான் கொடுத்தேன். அவ்வாறு ரொக்கமாக கொடுப்பது சட்ட விரோத செயல் என்றால் சரியல்ல. அவ்வாறு ரொக்கமாக ரூ.2,00,000/- மேல் வங்கி பரிவர்த்தனை மூலம்தான் மாற்ற முடியும் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை .. இல்லை.**

<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு</u>

**<u>O.S.362/2018</u>**

2020 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி DW1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.என்.உமா மகேஸ்வரி, எம்.ஏ., எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **எம்.சுப்பிரமணி DW1** | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

**முதல் விசாரணை ..**

நான் இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். தாவா தள்ளுபடி ஆகவேண்டும்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**